ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்யதர்மம்.

## ஓர் விக்ஞாபனம்,

தர்மாபிமானிகாள்!

நமது மதத்திற்கு "ஆரியதர்மம்" எனப்பெயர். தற்காலம் "ஆர்யஸமாஜம்" என்று ஓர் புது மதமொன்று சிலர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. "ஆர்யதர்மம், ஆர்யஸமாஜம்" இவைகளுக்கு பெயரால் ஓர் சிறிய வித்யாஸமே உள்ளபடியால் இப்பெயரைக்கேட்டவுடன் இவ்விரண்டும் ஒன்றே என்று முதலில் கருதிவிடுகிறார்கள். இக்கருத்தை மாற்ற வேண்டுமானால் இவ்விரண்டின் தத்துவமும் அறிந்திருக்கவேண்டியது அத்தியாவசியமானதுபற்றி எழுதலானோம்.

"ஆரியதர்மம்" புஸ்தகம் 14, ஸஞ்சிகை 29-ல் பிரும்மஸ்ரீ வால்மீகி நடேசசாஸ்திரிகள் அவர்களால் ஆரியஸமாஜநேதாவின் ரிக்வேதமந்திர பாஷ்யபங்க்தியில் ஒன்றை எடுத்து அதன்வித்தியாசத்தை வெளியிட்டிருக்கிறார். அதிலிருந்து "ஆர்யஸமாஜ" விஷயமான தத்துவசாரங்களை அவர் அறிந்திருக்கக்கூடுமென்று நினைக்கிறோம். தர்மாபிமானியானமகான் தயவு செய்து "ஆரியஸமாஜத்தின் உத்பத்திகாலம் அதன் கொள்கை அதற்கு அடிஸ்தானமான மதம், அதன் சாதகபாதகங்கள், அதனால் சனாதனதர்மிகளுக்கு எற்படும் நன்மைதீமை இவைகளை ஜனோபகாரமாக தாமதமின்றி நமது ஆர்யதர்மமூலமாய் வெளியிடவேண்டுமென்று மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

K. V. வீரமணிவாத்தியார்,
காரியதரிசி, ஹரிஹரபக்தஸமூகம்,
கொட்டாரக்கரை.

---

உ

# ஆர்ய தர்மம்.

பிரமோத-ஷு புரட்டாசி-மீ கூ, கசூஉ

## சர்மாவின் சங்கைகளுக்கு ஸமாதானம்.

(417வது பக்கத்தொடர்ச்சி.)

தவிற, " स्त्रीशूद्रद्विजबंधूनां त्रयी न श्रुतिगोचरा "

என்ற வசனப்படி வேதாதிகாரமற்ற ஸ்திரீசூத்திரர்களை தர்மோபதேசமூலமாக மோக்ஷத்தையடையும்படி செய்வதற்காகவும் புராணாதிகளை த்விஜர்கள் அத்தியயனம் செய்வது அவசியமேயாகும். த்விஜர்களுக்கோவென்றால் வேதத்தைக்கொண்டே புருஷார்த்தத்தை அடையும் ஸாமர்த்தியமுண்டு. ஆகவே அவர்களுக்கு புராணாதிகளைப் படித்துத்தான் கர்மானுஷ்டானம் முதலியவை ஏற்படவேண்டுமென்பதுமில்லை.

அன்றியும் புராணங்களுக்கு பரஸ்பர விரோதமிருப்பதாகக் கூறுவதும் அஸங்கதம். இவ்விஷயத்திற்கு முன்பே ஸமாதானம் கூறிவிட்டோம்.

18-புராணங்களையும் வியாஸர் ஒருவரெழுதவில்லை என்பதும் அஸங்கதம்.

புராணங்களை 18ஆக ஸங்கிரஹம் செய்தவர் வேதவ்யாஸரென்று கூறும் நமது ஸித்தாந்தத்தில் வியாஸர் புதிதாக ஸிருஷ்டிக்கவில்லையென்பது இஷ்டந்தான்.

சர்மாவானவர் வியாஸரொருவரால் புராணங்கள் எழுதப்படவில்லை என்று கூறுவதற்கு என்ன தாத்பரியம் கூறுகிறாரென்று வினவவேண்டும். புராணங்களுக்குள் பரஸ்பரவிரோதங்காணப்படுவதால், அத்தகைய புராணங்களை ஒருவர் செய்திருக்கமுடியாதென்றால் அவ்விரோதத்தை காலபேதத்தால் பரிஹரித்துவிடுவது

சாஸ்திரீயமேயொழிய கர்த்ருபேதத்தால்பரிஹரிப்பது சாஸ்திரீய மில்லை. அதாவது கிருதயுகத்தில் சிலபுராணங்களை ஆதரிக்கும்படி யாயும் திரேதை முதலியவற்றில் சில புராணங்களையாதரிக்கும்படி யாயும் வியவஸ்தை செய்துவிடமுடியாதா? அன்றியும்

एकार्थानिपुराणानि என்ற பாரதவசனப்படி வேதார்த்த மொன்றையே அனேக கதைகளை எடுத்துக்காட்டி வெளியிடும் புராணங்களை எப்படி பரஸ்பர விரோதமுள்ளவைகளாகக் கருதக் கூடும்? இப்படி கட்டுக்கதைகளை எழுதுவது ஹீநமென்று நினைப் பதும் தவறு. கட்டுக்கதைகளை எழுதியாவது ஜீவராசிகள் தர்மா தர்மங்களை உணர்ந்துகொள்ளுமாறு செய்யுங்காரணத்தால் காருண்யமல்லவா தெரிகின்றது. இக்காரணத்தால் வியாஸபக வானை நிந்திப்பதும் பாபமேயாம். வேதத்தாலும் பகவத்பாதர் முதலிய முன்னோர்களின் வசனத்தாலும் ஸ்மிருதிகளாலும் வியாஸாசாரியர்ஈசுவரஸமானரென்றல்லவாதெரிகின்றது. வியாஸ ருடைய மஹிமையைவேதமும் புகழ்கின்றதென்று முந்திசொல்லி யிருப்பதும் ஞாபகத்திலிருக்கவேண்டும்.

அத்தகைய வேதவியாஸருக்கு 18புராணங்களை இயற்று வதற்கு ஸாமர்த்தியமில்லை என்பது பொருந்தாது. தபோமஹிமை யாலும் தர்மானுஷ்டானம், அஷ்டாங்கயோகம் முதலிய புண்ய கர்மவிசேஷத்தாலும் அமானுஷசக்திவாய்ந்தவரல்லவா? வியாஸர் முதலியவர். அச்சக்திமூலமாகஅவர்களுக்குப்புராணங்களை இயற் றும் ஸாமர்த்தியம்ஏன் இருக்கக்கூடாது? புராணங்களைச்செய்வது மட்டிலுமா இவருக்கு ஸாத்தியமென்பது? இவ்வுலகத்தையே அழித்துவிட்டு பிரும்மதேவரைப்போல் புதிதாக ஸிருஷ்டிக்கும் ஸாமர்த்தியமுமிவர்களுக்குண்டு. வியாஸர் முதலிய மகரிஷிகளால் கண்டுபிடிக்கப்படாத தத்துவமில்லை,செய்யப்படாத காரியமில்லை, உபகாரமுமில்லை, வருணாசிரமதர்மானுஷ்டானத்தால்தான் அவர் களுக்கு இவ்வித ஸாமர்த்தியமமைந்தது.

ராமாயணத்தினாரம்பத்தில் வால்மீகிமகரிஷியானவர் தர்ம வீரியத்தால்தான் நான் ராமாயணத்தை எழுதுகிறேனென்று கூறுகின்றார்.

रहस्यं च प्रकाशं च यद्वृत्तं तस्य धीमतः ।

तत्सर्वंधर्मवीर्येण यथावत्संप्रपश्यति ।

धर्मेणान्वेषते गतिं । என்று.

ஸ்ரீமகாபாரதத்தினுபக்கிரமத்தில் ஸ்ரீவியாஸபகவானும் அவ்விதமே சொல்லியிருக்கின்றார்.

बिशोद्ध्य देहं धर्मात्मा दर्भसंस्तरमाश्रितः ।
भारतस्येतिहासस्य धर्मेणान्वीक्ष्यतां गतिम् ।
प्रावेश्य योगं ज्ञानेन सोऽपश्यत्सर्वयत्नतः ।
इतिहासामिमं चक्रे पुण्यं सत्यवतीसुतः ।

என்று. இத்தகைய மஹிமைவாய்ந்தவர்களை நிந்தித்துப்பேசுவது மஹாபாபமென்பதிலென்ன ஸந்தேகம்?

कोनु व्यासः कइव स मनुः कोन्वसौ याज्ञवल्क्यो
यैरुद्दुष्टं हितमसकृदस्मासु पित्रेव पुत्रे ।
पश्यामस्तान्निरुपधिकृपासागरान्लोकबंधून्
पश्यमोस्मन्निरवधितमःक्ष्माधरान्ब्रह्मबंधून् ॥

என்ற அபியுக்தவசனத்தாலும் இவ்விஷயம் காண்க.

இனி புராணங்களில் அனேக ஈசுவரனைச் சொல்லியிருப்பதாயும், வேதங்களில் ஏகஈசுவரவாதம் சொல்லப்பட்டிருப்பதாகவும் கூறும் இவருடைய ஸித்தாந்தத்தை பராமர்சம் செய்வோம்.

ஈசுவரனைப்பற்றி புராணங்களெப்படி அபிப்பிராயப்படுகின்றனவோ, அதேவிதமாகத்தான் வேதங்களும் அபிப்பிராயப்படுகின்றனவேயொழிய வித்யாஸமில்லை.

एको देवस्सर्वभूतेषु गूढस्सर्वव्यापी सर्वभूतांतरात्मा । कर्माध्यक्षस्सर्वभूताधिवासः साक्षी चेता केवलो निर्गुणश्च ॥

एकमेवाद्वितीयम् । नान्योऽतोऽस्तिद्रष्टा । रूपंरूपं प्रतिरूपोबभूव तदस्यरूपं प्रतिचक्षाणाय मायाभासेन जीवेशौ करोति ॥

यथाह्येको ज्योतिरात्मा विवस्वानपोभिन्नाबहुधैकोनुगच्छन् ।
उपाधिना क्रियते भेदरूपो देवःक्षेत्रेष्वेवमजोऽयमात्मा ॥

என்ற வேதாந்தங்களால் எவ்விதம் ஈசுவரஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டுளதோ அவ்விதமே

एकएव हि भूतात्मा भूतेभूते व्यवस्थितः ।
एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत् ।

एतमेके वदन्त्यन्ये मनुमन्ये प्रजापतिम् ।
इन्द्रमेके परे प्राणमपरे ब्रह्म शाश्वतम् ॥ மனுஸ்மிருதி.

यएकश्शाश्वतो देवः ब्रह्मवन्द्यस्सदाशिवः ।
त्रिलोचनो गुणाधारो गुणातीतोऽक्षरोऽव्ययः ।
जाता सिसृक्षा तस्याथ वीक्ष्यात्मस्थं गुणत्रयम् ॥ மாத்ஸ்யம்.

माहेश्वरपुराणानि समस्तानि महामुने ।
असाधारणया मूर्त्या नाम्ना साधारणेनच ।
वदन्ति परमं तत्वं शिवं सांबं त्रिलोचनम् ।
त्रिमूर्तीनां हरं चापि तदंशास्तस्यवै भवम् । சிவபுராணங்கள்.

என்று ஸ்மிருதிபுராணங்களிலும் கூறப்பட்டுள்ளன. அதாவது— வேதங்களில் உண்மையில் ஒருவராயிருக்குமீசுவரன் மாயாசக்தி மஹிமையால் அனேகராகவுமிருப்பதாக சொல்லப்பட்டிருப்பது போலவே புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றனவே யொழிய வித்யாஸமாயும் விரோதமாகவும் சொல்லப்படவில்லை.

நமது வேதாந்தத்தில் கூறியிருக்கும் ஈசுவரஸ்வரூபத்தின் பிரகாரமாவது—

நமது மதத்தில் திருக்கென்னும் திருச்யமென்றிருவிதம் பதார்த்தம். இவற்றில் திருக்கென்பது பாரமார்த்திகமாகிய ஆத்மா ஒன்றே. அறிவுருபமாகிய அவ்வாத்மா உண்மையிலொன்றாயினும் மாயை என்னுமுபாதிபேதத்தால் மூன்றுவிதமாகவிருக்கிறது. ஈசுவரன், ஜீவன், ஸாக்ஷி என்று.

அவ்வீசுவரன் ஸத்வரஜஸ்தமோகுணங்களின் பேதத்தால் பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், ஸரஸ்வதி, லக்ஷ்மீ, பார்வதி என்று மூன்றுவிதமாகவும் இருக்கிறார் என்று.

காலத்திரயத்திலும் அகண்ட பரிபூரணமாய் மனோவாகதீதமாய் நிற்குணமாய்ப்பிரகாசிக்கும் பிர்ம்மம் என்னும் வஸ்து ஒன்றே ஸகுணமாகி ஈசுவரனென்ற பெயரையடைந்து ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளைச் செய்கின்றது. பிரும்மத்திற்கு மாயையின்றி ஈசுவரத்தன்மை ஸித்தியாது. மாயாசக்தியுடன்கூடிய சைதன்யத்தையே, ஈசுவரன் பரமாத்மா ஸர்வக்ஞன் கர்மபல தாதாவென்றும் வழங்குவதுண்டு. நிர்குணத்தை போதிப்பது

இயலாததுபற்றி ஸகுணத்தையும் அவசியம் அறிவிக்கவேண்டும். இந்தஸகுணேசுவரனையே அடியிற்கண்ட சுருதிஸ்மிருதிகளுரைக்கின்றன.

सवाएष महानजः । एषलोकपालः । एको बहूनां यो विदधाति कामान् । यस्सर्वज्ञः सर्ववित् । अस्मान्मायी सृजते विश्वमेतत् ।

என்று. இப்படிப்பட்ட இறைவனுடைய அனுக்ரஹம் பெற்றுப் போன்பு வீடு சேருவதற்குத்தான் வழிதேடவேண்டும். எஜமானனது ஆக்ஞையின்படி, வேலைசெய்யும் வேலைக்காரனிடம் அவனுக்குப்ரீதி ஏற்படுவதுபோல், ஈசாக்ஞையாகிய சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு. விதிப்படி நடக்கின்றவர்களிடமும், பகவானுக்கு ப்ரீதி ஏற்படுமென்பது உசிதமே. இந்தப்பிரீதியே அவருடைய அனுக்கிரஹமாகும். ஆகவே ஈசானுக்கிரஹம் பெறவிருப்பமுள்ளவர்கள் விதிநிஷேதவடிவமாகப் பிரவர்த்தித்திருக்கும் சாஸ்திரமாகிய ஈசாக்ஞைக்குட்பட்டுநடக்கவேண்டும், இறைவனிடம் பக்திசெலுத்துவதும் அவசியமேயாகும். ஈசுவரோபாஸனையால் அடையமுடியாதபயன் யாதொன்றுமில்லை, ஈசுவரன் பக்தகோடிகளின் அனுக்கிரஹத்திற்காகவே, சிவ, விஷ்ணு, பிரும்ம, விக்னேசுவார், சுப்பிரமணியர், தேவி முதலிய மூர்த்திகளை எடுத்துக்கொள்கின்றார். மூடபக்தியாலும் பகவானுடைய அனுக்ரஹம் பெற்றுவிடலாம் என்பது நமது சாஸ்திரத்திலுள்ளமர்மம். மூடபக்திக்கும், ஏதாவதொரு வஸ்துவில் பகவானுடைய பாவனையை உறுதியாக அடைவதுதான் காரணமாகும். மூடபுத்தியுள்ளவர்களைக் குறித்துத்தான், சாளக்கிராமம், பாணம் முதலியவைகளில் பகவானின் பாவனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், எவனுக்கு எவ்வித நாமரூபத்துடன் கூடிய பகவானை உபாஸிப்பதில், பூர்வஜன்மவாஸனாவசமாக ஆவலேற்படுமோ, அவனுக்கு ஸர்வேசுவரனொருவனே அவ்விதமாயுள்ள நாமரூபத்தோடு அனுக்ரஹிக்கின்றார். அப்படி பக்தனால் உபாஸிக்கப்படவேண்டிய நாமரூபங்களும் சாஸ்திரவிஹிதமாக இருக்கவேண்டுமேயொழிய நம்முடையபுத்திக்குத் தோன்றியபடி ஏதாவதொரு நாமரூபத்தை பகவானாக உபாஸனை பண்ணுவது முடியாது, பயனையும் தாராது. ஆதலால் சாஸ்திரங்களில் கூறியவண்ணம் ஈசுவரனையுபாஸித்து க்ஷேமமடையவேண்டும். சாஸ்திரங்களில் பகவானை சில ஜடவஸ்துக்களிலும் சில

சேதனவஸ்துக்களிலும் உபாஸிக்கலாம் என்று விதிக்கப்பட்டுள்ளது. பூதப்பிரேதங்களையும், யக்ஷராக்ஷஸர்களையும், மஹமாயி முதலிய தேவதைகளையும், அச்வத்தம் முதலிய விருக்ஷங்களையும், ஸாக்ஷாத்தாகவே ஸர்வேசுவரனையும், உபாஸிக்கலாம். மூடபக்தியாக விருக்ஷங்களையும், சிலைகளையும், விக்கிரஹங்களையும், மற்றுமுள்ள தேவர்கள், முனீசுவரர், பிதிருக்கள் முதலிய மூர்த்திகளையும், உபாஸனை புரிபவர்களுக்கும், அவ்வுபாஸனையின் பயனை ஸர்வேச்வரன்தான் கொடுக்கவேண்டுமேயொழிய அம்மூர்த்திகளல்ல. அம்மூர்த்திக்குள்ளேயும் ईश्वरस्सर्वभूतानाम् என்ற சாஸ்திரப்படி ஸர்வேசுவரனன்றோ அந்தர்யாமியாக வீற்றிருக்கிறான். फलमतउपपत्तेः (பிருமஸூ) என்ற நியாயப்படி ஜீவர்களின் வேலையையனுஸரித்து பயனையளிக்கும் ஸாமர்த்தியம் ஸர்வேச்வானுக்குத்தானன்றோ? ஜடமாகிய விருக்ஷங்களுக்கும் அற்பஅறிவு சக்தியமைந்த தேவர்களுக்கோ, விக்கிரஹம் முதலிய சிலைகளுக்கோ, துர்குணங்கள் நிரம்பிய குரு மாதா பிதா இவர்களுக்கோ, தம்மை உபாஸிப்பவர்களுக்கு காலதேசவர்த்தமானங்களையனுஸரித்துப் பயனையளிக்கும் சக்தி சிறிதுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நீசதேவதைகளையும் விருக்ஷம் முதலிய ஜடவஸ்துக்களையும் புராணங்கள் பிரதிபாதிக்காமல் எப்படியிருக்கமுடியும்?

இவ்விதம் வேதத்தில் ஜடவஸ்துக்களையும்நீசதேவதைகளையும் உபாஸனைபண்ணலாம்என்று அறிவிக்கவில்லை என்பதுமறியாமை. வேதாந்தங்களெல்லாம்ஏகோபாசனையையும்அனேகோபாசனையையும் விதிக்கின்றன. ஏகோபாஸனைக்குமட்டிலும்எண்ணிலடங்காத சுருதிகள் ஆதாரமுண்டு. வேதாந்தங்களில் உபாஸனையை விதிக்கும் பாகம் அதிகமாக உண்டேயன்றி ஞானத்தையறிவிக்கும் பாகமல்ல.

एकत्वेन बहुत्वेन बहुधा विश्वतो मुखं ।

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।

तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ।

तं यथायथोपसते तदेव भवति । यथाक्रतुरस्मिन्लोके पुरुषो भवति तथेतः प्रेत्य भवति ।

मनो ब्रह्मेत्युपासीत । आदित्यो ब्रह्मेत्यादेशः । योषिदाग्निमुपासीत। मातृदेवो भव पितृदेवो भव ।

स्यात्परमेश्वरस्यापि मायावशात्साधकानुग्रहार्थं मायामयं रूपं ।
न प्रतीके नहिसः । ब्रह्मदृष्टिरुत्कर्षात् ।

இவ்வசனங்களின் அர்த்தத்தை ஆங்காங்குஸத்குருவின்மூலமாக விசாரிக்கவும்.

ஸ்ரீருத்திரத்திலும் புருஷஸூக்தங்களிலும் பகவத்கீதையின் பகவானுடைய விபூதிவிலாஸத்தையறிவிக்கும் அத்தியாயங்களிலும் அநேக உபாஸனையும் விதிக்கப்படுகின்றபடியால் அனேக விருக்ஷங்களையும் தேவதைகளையும் உபாஸிக்கும்படி புராணங்கள் வேதாந்தஸித்தாந்தரஹஸ்யத்தை நாமுணர்ந்துய்யும்படியுள்ள கருணையாலுறைப்பதில் என்ன விரோதமிருக்கிறது.

இந்த சுருதிஸ்மிருதிபுராணாதிகளின் ஸமாஸஸித்தாந்தத்தை ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகளவர்களும் வெகு அழகாய் வர்ணனம் பண்ணியிருக்கிறார்கள். அவருடைய ஸித்தாந்தவாதங்களிலிரண்டொன்றை எடுத்துக்காட்டுவாம்.

ईशसूत्रविराड्वेधोविष्णुरुद्रेन्द्रवन्हयः ।
विघ्नभैरवभैराल मारिका यक्षराक्षसाः ॥
विप्रक्षत्रियाविट्शूद्राः गवाश्वमृगपक्षिणः ।
अश्वत्थवटचूताद्याः यवव्रीहिगुणादयः ॥
जलपाषाणमृत्काष्ठ वास्याकुद्दालकादयः ।
ईश्वरास्सर्वएवैते पूजिताः फलदायकाः ॥
उपास्तीनामनुष्ठानमार्षग्रंथेषु भाषितम् ।
विचाराक्षममन्यांश्च तच्छ्रुत्वोपासते गुरोः ॥ என்று.

இது நிற்க, வேதத்தில் க்ஞானத்தால் மோக்ஷத்தையடையமுடியும் என்று சொல்லியிருப்பதாயும், கிருஷ்ணன், ராமன், ஸாளிககிராமம், கங்கை இவைகளின் பெயரைச்சொன்னாலேயே முக்திபெற்றுவிடலாம் என்று புராணங்களில் கூறியிருப்பதாயும் சர்மா எழுதுவது ஸரியல்ல.

வேதாந்தங்களில் க்ஞானத்தால்தான் மோக்ஷம் ஸித்திக்கும் என்று உரைத்திருப்பதுபோல் அந்த க்ஞானத்தை அடைய வேண்டியதற்காக அனேகவிதமாகிய யோகம், உபாஸ்தி, கர்மா, விசாரம் முதலிய ஸாதனங்களையும் விதிக்கவில்லையா?

அப்படிப்பட்ட பாம்பராஸாதனமில்லாவிட்டால் ஆத்மதத்வக்ஞானம் உதிப்பதற்கு நியாயமில்லை. புராணங்களிலுள்ள பகவந்நாமோச்சாரணம், பஞ்சாயதனதேவபூஜை கங்கைமுதலியபுண்யநதிஸ்நாநம், ஆலயதரிசனம் இவைகளைக்குப் பவபந்தமழிக்கும் ஆத்மதத்வக்ஞானத்தைக் குறித்து பாம்பாகாரணத்வம் உண்டென்பதில் என்ன விரோதம்?

பகவானுடைய ஸ்வரூபத்தை நம் ஹிருதயகமலத்திலிறுத்துவதற்கு பகவந்நாமோச்சாரணம் முதற்காரணம். நவீனபௌதிக யோகசாஸ்திரத்திலுங்கூட ஒருவனின் பெயரைச்சொல்லிக்கொண்டு அடிக்கடியிருக்கும்பக்ஷத்தில் அவனுடைய ஸ்வரூபத்தையும் தரிசித்துவிடலாம் என்று பிரஸித்தமானது. பெயரைத் தெரிந்துகொள்ளாமல் அவருடைய ரூபதேயத்தை எப்படி அறிவது? பகவந்நாமோச்சாரணத்தால் பகவத்ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கமுடியும் என்ற விஷயம் சுருதி, ஸ்மிருதி, புராணுதிகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

यः पुनरेतं त्रिमात्रेणोमित्येतेन । एतदालंबनं श्रेष्ठं । ॐइत्येतत् ।
ओमीत्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥
अपिवायःश्वण्डालः शिवइति वाचं विसृजेत् ।
" यत्द्व्यक्षरं नामगिरेरितं नृणां "

कलौ संकीर्त्यं केशवं என்பதாதி வசனங்களால் நாமோச்சாரணமஹிமை புலப்படவில்லையா? அப்படியே ஸாளிக்கிராமம் முதலிய வஸ்துக்களை உபாஸிப்பதும் உசிதந்தானென்பதும் முன்பு நிரூபித்துளோம். ஆகையால் வேதத்தில் ஞானத்தால் மோக்ஷமுண்டென்று சொல்லியிருப்பதாயும் புராணங்களில் அப்படிச் சொல்லவில்லையென்பது பிசகுதான்.

வேதம் "ஜீவனிறந்தபிறகு கர்மவசமாகமறுஜன்மமெடுக்கின்றான். அக்கர்மம் அந்த ஜன்மத்தில் பலனைக் கொடுத்துவிட்டு அதோடு அழிந்துவிடுகிறது. வேறு கர்மத்தால் வேறு சரீரம் வருகிறது. அதன் பயனை அந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறோம். இவ்வாறு அவனவன் செய்த கர்மாவின் பயன் அவனவனையடைகிறது" என்று கூறுகிறதாம்,

புராணத்திலோ அவர்களின் புத்திரபௌத்திராதிகளால் கயை முதலியவிடங்களில் கொடுக்கப்படுகின்ற பிண்டாதிகளால் பிதிருக்களுக்கு திருப்தியுண்டாவதாகக் கூறப்படுகின்றது என்று நண்பர் சர்மா எழுதியிருக்கிறார்.

சர்மா ஜீவன் லோகாந்தரம்செல்லுகின்றனென்பதை ஒப்புக் கொள்ளுகிறாரா இல்லையா? இல்லையென்றால் லோகாந்தரமேஇல்லை என்பதால் ஜீவனவ்விடம் செல்வதில்லையா? அல்லது லோகாந்த ரத்தையடைந்து இன்பதுன்பங்களையனுபவிக்கக்கூடிய ஜீவன் சரீ ரத்தைக்காட்டிலும் வேறாகவும் நித்யனாகவுமில்லை என்பதாலவ் விடம் செல்வதில்லையென்றா?

லோகாந்தரமுண்டென்பது சுருதி, ஸ்மிருதி, புராணம், யுக்தி, பிரத்தியக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் நிச்சயமாய்ப் புலப்படும் போது லோகாந்தரமில்லையென்னும் முதலாவது பக்ஷம் ஸரியல்ல. இதனை முன்பே விஸ்தரித்துவிட்டோம். அவ்விதமே பிரமாண கணங்களாலும் அனுபவத்தாலும் சரீரத்தைக்காட்டிலும் ஆத்மா வேறாகவுண்டென்பதும் ஸித்தித்துவிடுவதால் இரண்டாவதும் ஸரியல்ல.

லோகாந்தரத்தையடையும் ஜீவன் வேறாகஇல்லாதபக்ஷத்தில் கர்மவிதி சாஸ்திரமனைத்தும் பிரயோஜனமற்றதாய் முடிந்துவிடும். இறந்தவன் லோகாந்தரஞ்செல்லாமல் இவ்விடம் ஜன்மாந்தரம் எடுப்பதில்லை என்பது வைதிகசாஸ்திரஸித்தாந்தம். ஜீவன் ஸ்வர்க்க நரகங்களில்ஸுகதுக்கங்களைதம்தம்கர்மானுஸாரமாகஅனுபவித்து விட்டு மிச்சமாயுள்ள கர்மானுஸாரமாக இங்கு ஜன்மமெடுப்பதாக வேதங்களில் சொல்லப்படுகின்றதேயொழிய லோகாந்தரம் செல் லாமல் இங்கேயே ஜன்மாந்தரமெடுப்பதில்லை. பூர்வஜன்மங்களில் ஸம்பாதிக்கப்பட்ட கர்மங்களனேகமன்றோ?

அக்கர்மாக்களின்பயனை ஒரே ஜன்மாவிலனுபவித்துஒழித்து விடமுடியுமா ? சிலகர்மாக்களின் பயனை பரலோகத்தில் தானனு பவிக்கவேண்டும். சிலகர்மாக்களின் பயனை இவ்வுலகத்தில் அனு பவிக்கவேண்டும். இவ்வுலகத்தில் உள்ள போக்யவஸ்துக்களை எல்லாம் ஜீவர்களின் கர்மாவை அனுஸரித்தன்றோபகவான்ஸிருஷ் டித்திருக்கின்றார். ஆகவே அனேக ஜன்மங்களையடைந்து அனு பவித்துத் தொலைக்கக்கூடிய கர்மாக்களேனகம் என்பதிலும் அவ

னவன் செய்த கர்மபலன் அவனவனுக்கு சேருகிறதென்பதிலும் என்ன ஸந்தேஹம்? ஆகவே வேதத்தின் அபிப்பிராயத்தை மாற்றி வேதத்தினபிப்பிராயமாகக் கருதி எழுதுவதும் புராணவிரோதம் வந்துவிட்டதென்று உளறுவதும் மூடத்தனமன்றோ.

சிராத்தாதிகளால் பிதிருதிருப்தி ஏற்படலாமென்பதற்கு முந்தியே அனேக சுருதி வசனங்களையும் ஸ்மிருதிகளையும் எடுத்துக்காட்டிவிட்டோம். பிதிருக்கள் சிராத்தம் நடக்குமிடத்தில் பிரத்தியக்ஷமாய் வந்து ஹவ்யகவ்யங்களை ஜன்மாந்தரமடைந்தவரால் எப்படிப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதும் சரியல்லவென்று முன்பே நிரூபித்துவிட்டோம்.

अवाड्ढव्यानि सुरभीणि कृत्वा प्रादात्पितृभ्यः स्वधयातेअक्षन् ।

என்ற சுருதியிலும் சிராத்தாதிகளால் திருப்தியுண்டென்பதுசொல்லப்பட்டது கவனிக்கத்தக்கது.

இனி ஸ்திரீகளுக்கு வேதத்தில் அதிகாரமுண்டென்பது வேதஸித்தமென்பதையும் விசாரிக்க ஆரம்பிப்பாம். ஸ்திரீகள் வேதத்தைப் படிக்கலாமென்பதற்கு வேதாதாரமுண்டென்று கூறும் சர்மா ஒரு வேதவாக்கியத்தையாவது எடுத்துக்காட்டினரா? எடுத்துக் காட்டுவாரா? அப்படி அவர் எடுத்துக்காட்டிய சுருதியையும், ஸ்திரீகளுக்கு வேதாத்தியயனத்தை விதிப்பதாகச் சொல்லமுடியுமா? வேதப்பிரமாணமொன்றையே நம்பிக்கொண்டிருக்குமிவர் ஸ்திரீகள் வேதாத்தியயனம் செய்யும் விஷயத்தில் வேதப்பிரமாணத்தையல்லவா நிரூபிக்கவேண்டும்.

இவருடைய அபிப்பிராயத்துக்கு அனுகூலமாக சுருதிவாக்கியம் ஒன்று கூட இல்லை என்பது மட்டிலுமல்ல. அவருக்குப் பிரதிகூலமாகவும் சில சுருதிவசனமிருக்கிறது. வேதங்களில் யக்ஞாதிகர்மங்களில் பத்னியால் உச்சரிக்கப்படவேண்டிய மந்திரங்களையும் அதன் அனுஷ்டானப் பிரகாரத்தையும் ஸ்திரீகள் அத்யயனத்தால் தெரிந்துகொள்ளலாமேயொழிய மற்றவைகளைக்கூடாதென்று நிஷேதிக்கின்றது. இதன்றி ஸ்திரீகளுக்கு எல்லா வேதபாகத்திலுமதிகாரமுண்டென்பதற்குச் சுருதிப் பிரமாணமில்லை.

இவ்விதமே சூத்திரர்களுக்கும் பக்ஷபாதமில்லாமலே வேதத்தில் சிலபாகத்தை அத்யயனம் பண்ணலாமென்றும் கூறப்பட்டு

ளது. ரதகாரேஷ்டிப்பிரகாணத்தை மட்டிலும் ரதகாரஜாதியில் பிறந்த சூத்திரர்கள் அத்தியயனம் பண்ணலாம். இவ்விருவர்களுக்கும் அவரவர்களுக்குறிய மந்திரபாகங்களை அத்யயனம்பண்ணுவது வேதஸம்மதமேயொழிய, எல்லாவேதமந்தரங்களேயுமல்ல.

இவ்விதம் ஸ்திரீ சூத்திரர்களுக்கு பூர்ணவேதாதிகாரங்கிடையாதென்று கூறும்வேதங்களினபிப்பிராய மென்னவென்றால் புருஷர்களால் உச்சரிக்கவேண்டிய மற்ற மந்திரார்த்தவாதங்களையெல்லாம் ஸ்திரீகள் எதற்காக அத்தியயனம் செய்யவேண்டும். அவர்களுக்கு வேண்டிய வேதபாகங்களைமட்டிலும் அவர்களத்தியயனம் செய்தால்போதாதா?

புருஷர்களுக்கும், ஸ்திரீரதகாரஜாதிகள் கற்கக்கூடிய வேதபாகங்களை அத்யயனம் பண்ணுவது அவசியமில்லையென்று மாறுதலாகக் கூறுவதும் நல்லதல்ல,

புருஷர்களால்சொல்லக்கூடியமந்திரபாகமதிகம், ஸ்திரீகளால் சொல்லக்கூடிய மந்திரபாகங்கொஞ்சம், கொஞ்சமாயிருக்கும்பாகத்தைபுருஷர்களத்தியயனம்பண்ணுவதுசிரமமில்லை. புருஷர்களுக்கு எல்லாவேதங்களையும், அங்கங்களுடன் அத்தியயனம், செய்யும் விஷயத்தில், வேதப்பிரமாணம் பலவிருப்பதால் ஸ்திரீ சூத்திரர்கள் பாகத்தையும், புருஷர்களத்தியயனம் செய்யவேண்டும்.

அன்றியும், ஸ்திரீகளுக்கு எல்லாவேதபாகங்களையும் அத்யயனம்செய்வதற்கு அவகாசமேற்படுவதற்கும் நியாயமில்லை. ஸ்திரீகளுக்கு உபனயனஸ்தானத்தில் விதிக்கப்பட்டுள்ள விவாஹம் நடந்தவுடன், பதிகிருஹத்தில் வாஸமும், பதிசுச்ரூஷையுமல்லவா வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்டிருக்கின்றது. புருஷர்களுக்கோவென்றால் இத்தவயதுமுதல், இவ்வயதுவரையில் வேதவேதாங்கங்களை அத்தியயனம் செய்தபிறகுதான், கிருஹஸ்தாச்ரமத்தை யடையவேண்டும் என்று வேதங்களிலேயே வித்யாப்யாஸகாலம் வகுக்கப்பட்டுளது. ஸ்திரீகளுக்கோ ஓரிடத்திலும் வித்யாப்யாஸகாலம் வகுக்கப்படவில்லை. ஸ்திரீகளெந்தகாலத்தில் வேதாதிகளை அத்தியயனம்செய்யமுடியும், தமக்குபயோகபாயுள்ளவற்றை அத்தியயனம் செய்வதே வெகுதுர்லபம் அல்லவா? இவ்விதமே சூத்திரர்கள் விஷயத்திலும் காண்க.

ஸ்திரீசூத்திரர்கள் வேதாத்தியயன விஷயத்தில், வேதங்களுக்குள் தாத்பரியபேதமுண்டு. ஸ்திரீகளும், சூத்திரர்களும், வேதாத்தியயனம் செய்யக்கூடாதென்பது சாஸ்திரஸித்தம். ஆனால், த்விஜஸ்திரீகள் வேதத்தை சிரவணம் செய்வதில் தோஷமில்லை. சூத்திராதிகளும், வேதத்தைக் கேட்கவுங்கூடாது. சூத்திரர்களுடைய ஸமீபத்தில், வேதாத்தியயனம் செய்யவும்கூடாது என்ற விசேஷமும் சாஸ்திரஸித்தமேயாகும்.

ஆகையால் ஸ்திரீசூத்திரர்கள் வேதாத்தியயன விஷயத்தில் சுருதிபுராணங்களுக்குள் பரஸ்பரவிரோதமிருப்பதாகச் சொல்வதும் பிசகு என்று ஸித்தம்.

ஆகையால் ஸ்திரீசூத்திரர்களுக்கு வேதத்தில் அதிகாரமில்லை என்பது சுருதிஸித்தமேயாகுமாதலால் சர்மா அவசியமங்கீகரிக்க வேண்டும்.

வேதம் எல்லாருக்கும் பொதுவானதென்பதும் தவறு, வேதம், த்விஜர்களாகவிருக்கும் புருஷர்களுக்குச் சொந்தஸொத்தேயொழிய, ஸ்திரீசூத்திரர்களுக்குச் சொந்தமானதல்ல. ஆகவே, அதை அவர்கள் எப்படிப்படிக்கலாம்? புருஷர்களுக்குத்தான் வேதம் சொந்தமானதென்பதும் சுருதிஸ்மிருதி புராணஸித்தமேயாகும். அல்லது, ஸ்திரீசூத்திரர்களுக்கும்வேதம்பொதுவென்பதாகவே அங்கீகரித்தாலும், சர்மாவின் யுக்தியனுஸாரமாக ஜலத்தை யாவரும் அவரவர்களின் சக்திக்கு அனுகுணமாகப்பங்கிட்டு பாகத்தையடைவதுபோல் ஸ்திரீசூத்திரர்களும் வேதத்தில் கொஞ்சபாகத்தை பங்கிட்டுப்பயனை அனுபவிக்கும்பொருட்டே அவர்களுக்கும், சிலமந்திரங்களிலத்தியயனாதிகாரமுண்டென வேதங்கள் முறையிடுகின்றன. ஆகவே, யுக்தி விரோதமென்பது சிறிதுமில்லை. இதனாலேயே காயத்திரீ, முதலிய வைதிகமந்திரஜபம் செய்யும் விஷயத்திலும், பாதிவ்ரத்யத்தைத்தவிற வேறு விருதானுஷ்டான விஷயத்திலும் ஸ்திரீகளுக்கதிகாரமில்லை என்று ஸித்தமாயிற்று. அவ்வாறே சூத்திரர்களுக்கும்.

ஸ்திரீகளுக்கு பாதிவ்ரத்தியம் முக்கியம். விருதம்முதலியவையெல்லாம் இவர்களுக்கு முக்கியமானதல்ல.

नास्ति स्त्रीणां पृथग्धर्मो न व्रतं नाप्युपोषणम् ।

என்றல்லவா ஸித்தாந்தம்.

பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களை, கணவனுடைய உபதேசத்தால் ஓங்காரமில்லாமல், ஸ்திரீசூத்திரர்கள் ஜபித்துவரலாமேயன்றி ஓங்காரத்துடன் அல்ல.

ஸ்திரீசூத்திரர்களுக்கு வேதத்தை ஸ்பஷ்டமாகப் படிக்க முடியாதென்ற காரணத்தால் அவர்களுக்கு வேதாத்யயனம் நிஷேதிக்கப்படவில்லை. அவர்கள் வேதாத்தியயனம் செய்யலாகாதென்ற நிஷேதத்தாலும், சாஸ்திரங்களில் வேதாப்பியாஸகாலத்தை அவர்களுக்குக் குறிப்பிடாமலிருப்பதாலும், ஸகல வேதாத்தியனத்தால் அவர்களுக்குஉபயோகமில்லையாதலாலும், பிரும்மயக்ஞம் சாஸ்திரங்களில் அவர்களுக்குஉண்டெனநிரூபிக்காததாலும், பிரும்மசர்யத்தைக் கணவன்வீட்டுக் காரியமென்றே சொல்லியிருப்பதாலும் தான் வேதாத்தியயனம் செய்யக்கூடாதென்பது. மஹாவிஷ்ணுவானவர் மோஹிநீரூபமெடுத்திருப்பதால் ஸ்திரீகள் அனைவரும் வேதாத்தியயனம் செய்யலாமென்று எப்படிஏற்படும்?

हरेः कोलावतारेण किटीनां का वरेण्यता ।

என்ற ஆன்றோர் வசனப்படி மஹாவிஷ்ணுவானவர் வராஹரூபமெடுத்திருப்பதால் ஏனைய பன்றிகளையுங்கூட சிறந்தவையாகவும் வேதாப்பியாஸாதிகாரம் பெற்றவையாயும் அங்கீகரிப்பது தகுதியாகுமா?

ஆகையால் வேதவேதாந்தங்களைப் படிப்பதில் ஸ்திரீகளுக்கு அதிகாரம் ஸித்திபெறமுடியாது. வேதங்களை சிரவணஞ்செய்வதில் தோஷமதிகமில்லை.

சூத்திரர்களுக்கோ வேதத்தை சிரவணமும் செய்யலாகாது என்பது சுருதிஸித்தம்.

அதாவது

पद्युहवा एतच्छमशानं यच्छूद्रः । तस्माच्छूद्रसमीपे नाध्येतव्यं ।

अथास्य वेदमुपशृण्वतस्त्रपुजतुभ्यां श्रोत्रपरिपूरणम् । என்று

தவிற வேதங்களைப் படித்துத்தான் அவர்களுக்கு மோக்ஷம் ஸித்திக்கவேண்டுமென்ற நியமமுமில்லை. இதிஹாஸபுராணாதிகளை சிரவணஞ்செய்வதாலும் பதிவிருதாதர்மானுஷ்டான மஹிமையாலும்,

ஆத்மதத்துவக்ஞானத்தையடைந்து பேறின்பஸுகத்தையுமவர்கள் அனுபவிப்பதில் என்ன ஆக்ஷேபம்? ஸ்திரீசூத்திரர்களுக்கு மோக்ஷமில்லையென்று வேதங்களுரைக்கவில்லையே? ஆனால் வேதார்த்தத்தை நேரில் விசாரித்து மோக்ஷத்தையடைவது அவர்களுக்குசிதமில்லை என்றுதான் கூறுகின்றன. வேதார்த்த விசாரம் நேரில் செய்வதற்கு இவர்களுக்குபனயனமில்லாததால் அதிகாரமில்லை. துருஹமாயும் கம்பீரமாயும் உள்ள வேதங்களை அர்த்தவிசாரஞ்செய்தால் எவ்வித பேறின்பஸுகத்தையனுபவிக்கலாமோ அதே ஸுகத்தை புராணதிசிரவணரூபமாகிய விசாரத்தாலும் அடைந்துவிடுவது நிச்சயமென்றால்ஸ்திரீகளுக்குவேதாத்யயனம் எதற்காகவேண்டும்? எதற்காக நிஷித்தகாரியத்தில் அவர்களைப் பிரவிருத்திக்கும்படி செய்யவேண்டும்? வேதத்தைத் தவிர மற்ற கிரந்தங்களை ஸ்திரீசூத்திரர்கள் படிக்கலாகாதென்று மகரிஷிகளும் நிஷேதிக்கவில்லை, வேதங்களைப்போலவே வேதாங்கங்களையும் அவர்கள் அத்தியயனம் பண்ணுவதில் பிரயோஜனமில்லை.

ஸ்திரீசூத்திரர்கள் விஷயத்தில் சுருதிஸ்மிருதிகள் பக்ஷபாதமாகப் பிரவிருத்தித்திருக்கின்றதாக நினைப்பதும் உசிதமில்லை. அவர்களை பக்ஷபாதமில்லாமலே சாஸ்திரங்கள்பிரவிருத்திக்கும்படி செய்கின்றனவேயொழிய அவர்கள்விஷயத்தில் பக்ஷபாதமாக வல்லவென்பது அவர்களுக்குச் சிறிதுமில்லை.

அவர்களுடைய சரீரஸ்ருஷ்டிபேதத்தையும் ஸ்வபாவத்தையுமனுஸரித்து குணதோஷங்களைமட்டிலும் சாஸ்திரம் நிரூபிக்கின்றது. அத்தகைய ஸ்வபாவபேதம் அவர்களிடமிருப்பதாலேயே இவர்களுக்கு வேதாப்யாஸத்தில் அதிகாரமில்லையே?

ஆகையால் ஸ்திரீகளுக்கும் வேதங்களைக் கற்பிக்கவேண்டுமென்பது ஸரியல்ல.

இனி அடுத்த விஷயம் விசாரிப்பாம்.

अष्टवर्षा भवेद्गौरी என்ற வசனானுஸாரமாக சிறு பெண்களுக்கு விவாஹம் செய்வதால் பிரும்மசர்யமழிந்துவிடுவதால் அதன்மூலமாக மற்ற மூன்று ஆச்ரமங்களுக்குமழியும் நிலைமை நேரிடுவதால் பாலிகாவிவாஹமாகாது. ஆச்ரமங்களெல்லாவற்றிற்குமே நாசத்தை விளைக்கின்றதென்றுதானே ஒப்பவேண்டும் என்று சர்மா அனுக்ரோசமடைகின்றார்.

பாலிகாவிவாஹஸம்பிரதாயத்தில் எப்படி பிரும்மசர்யாச்ரமத்துக்குக் கெடுதி என்று இவர் நிரூபிக்கவேண்டும்,

புருஷர்களுடைய பிரும்மசர்யஸ்தானத்திற்கும் ஸ்திரீகளுடைய பாலிகாவிவாஹவிதானத்துக்கும் எப்படி விரோதம் ஸம்பவிக்கும்?

த்விஜஸ்திரீகளுக்கு அல்லவா சிறுவயதிலேயே விவாஹம் செய்யவேண்டுமென்பது, புருஷர்களுக்கு சிறுவயதிலேயே விவாஹம் செய்யவேண்டுமென்பது கிடையாதல்லவா? புருஷர்களுக்கு சிறுவயதில் விவாஹம் செய்விக்கவேண்டும் என்று சாஸ்திரத்தில் சொல்லியிருந்தால் ஒருவாறு அவர்களுடைய பிரும்மசர்யம் கெட்டுவிடுமோவென்று ஸந்தேகங்கொள்ள இடமுண்டு. புருஷர்களுக்கு வேதாப்யாஸத்திற்குப் பிறகல்லவா விவாஹம் சாஸ்திரஸித்தம். வேதாப்யாஸத்திற்குத்தான் பிரும்மசர்யமென்னும் ஒரு ஆச்ரமாந்தரம் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்திரீகளுக்கு பிரும்மசர்யமென்பது இக்கலிகாலத்தில் நிஷித்தம் அல்லவா? அவர்களுக்கு பிரும்மசர்யாச்ரமமென்பதெல்லாம் கணவன் வீட்டுக்காரியந்தானல்லவா?

पतिसेवा गुरौ वासः गृहार्थोऽग्निपरिक्रिया ।

என்றல்லவா மனுகூறுகின்றார். ஆகவே அவர்களுக்குச் சிறுவயதில் விவாஹம் செய்யவேண்டுமென்று புராணங்களும், ஸ்மிருதிகளும், விதிக்குமேயானால் பிரும்மசர்யாச்ரமத்திற்கு லோபம்வரும்படி புராணங்கள் செய்துவிட்டனவென்பதெப்படிப்பொருந்தும். நமது மதத்தில் புருஷர்களுக்கு 28-வயதுக்குமேல்தான் விவாஹம் செய்யவேண்டும். ஸ்திரீகளுக்கு, எட்டாவது வயது, விவாஹமுக்கியகாலம். எட்டுமுதல், ருதுவுக்குமுன்பு விவாஹகௌணகாலம், ருதுவானபிறகு விவாஹம் செய்யவேகூடாது, ஆகவே, புருஷர்களுக்கு, 28-வயதில் 8-வயதுபெண்ணை விவாஹம்செய்வித்தால் பிரும்மசர்ய மதிககாலமுள்ளதாகுமேயொழிய குறைந்துவிடமாட்டாது. ஆதலால் பாலிகாவிவாஹமுறையால் சிறிதுமொரு ஆச்ரமத்துக்கும் லோபமே இல்லை. வர்ணாசிரமதர்ம ஸ்வரூபத்தை விசதமாக வெளியிடும் பொருட்டேற்பட்டுள்ள ஸ்மிருதிகளும்புராணங்களும், ஆச்ரம ஸ்வரூபந்தெரியாமல் போகும்படி செய்யுமா? இதனுல், "புராணங்களில்தான் பாலிகாவிவாஹம் விதிக்கப்பட்

டுள்ளது வேதங்களில் பாலிகாவிவாஹ விதிவாக்கியமொன்றுமிலலை" என்ற சர்மாவினபிப்பிராயமும் ஸரியானதல்லவென்று நிரூபிக்கப் பட்டாய்விட்டது. வேதங்களில் பாலிகாவிவாஹவிதிவாக்யமில்லையென்பது வாஸ்தவந்தான் ருதுமதீவிவாஹ விதிவாக்கியமேதாவதொன்றை இவர்எடுத்துக்காட்டுவாரா? வேதங்களெல்லாம் ஸ்திரீகளின் விவாஹவயதைவ்யங்கியமரியாதையாகவல்லவா அறிவிக்கின்றன. இவ்வளவு வயதில்த்தான் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்று நிரூபிக்கும் வேதவசனம் யாதொன்றும் ஸ்பஷ்டமாக இல்லை. ஸ்மிருதிகளில் ருதுமதீவிவாஹத்தை நிந்தித்திருப்பதால், ஸ்மிருதிகளுக்கு ருதுமதீவிவாஹத்தில் தாத்பர்யமில்லை என்று ஸித்திப்பதோடுமட்டும் நிற்காமல் வேதங்களுக்கும், ருதுமதீவிவாஹத்தில் தாத்பர்யமில்லைஎன்பதையும் ஸ்தாபித்துவிடும்,ஏனென்றால்,வேதங்களுக்கு ருதுமதீவிவாஹத்தில் தாத்பரியமிருக்குமேயானால் அதனர்த்தத்தை வெளியிடும். ஸ்மிதிகள் ருதுமதீவிவாஹத்தை ஸ்பஷ்டமாக நிந்தைபுரியுமா? வேதத்திற்கு விரோதமாக ஏதாவதொன்றை ஸ்மிருதிகளுறைக்குமேயானால் அவைகளைப் பிரமாணங்களாக நாமங்கீகரிக்கமுடியாதல்லவா? வேதத்திற்கு விரோதமாயிருப்பதுபற்றியே ஸாங்கியாதி தர்சனஸ்மிருதிகளையும் வேதபாஹ்ய ஸ்மிருதிகளையும், பிரமாணமாக ஒப்புவதில்லை.நமக்கு, வேதமும், வேதவிருத்தமற்ற அர்த்தத்தையறிவிக்கும், மற்றகிரந்தங்கள்யாவும், மதகிரந்தங்களல்லவா? வேதத்தையனுஸரித்து, மற்றஸ்மிதிகளுக்கு அர்த்தங் கூறவேண்டுமேயொழிய ஸ்மிருதிகளை யனுஸரித்து வேதங்களுக்கு அர்த்தங்கூறுவது சாஸ்திரநியாயஸித்தமன்று. வேதம், ஸ்மிருதிகளைக்காட்டிலும், பிரபலப்பிரமாணமில்லையா? இவ்விஷயத்தை சர்மாவும், நன்றாயொப்புக்கொண்டிருக்கிறார். வேதங்களெல்லாம் லிங்கப்பிரமாணத்தால் கன்யாவிவாஹத்தையே வற்புறுத்துகின்றன.

இவ்விஷயம், வயோநிர்ணயத்தில் விசதமாகக்கண்டு தெளியவும். இப்படிவேதங்களால் லிங்கப்பிரமாணமூலமாக அறிவிக்கப்படுகின்ற இளம்பெண் விவாஹத்தையேதான் ஸ்மிருதிகளுமறிவிப்பதால் புராணங்களில்மட்டிலும் சிறுவயதுவிவாஹம் காணப்படுகின்றதென்ற அனுக்ரோசம் ஸரியல்ல ஆகவே சுருதிகளுக்கும் ஸ்மிருதிபுராணாதிகளுக்கும் ஸ்திரீகள் விவாஹவிஷயத்தில் அபிப்பிராயபேதமில்லையென்றும் ஒரேவிதமாயுள்ள கன்யாவிவாஹத்திலேயேதான் அபிப்பிராயமென்றும் ஸித்தம்,

இவற்றாலேயே பாலிகாவிவாஹ அனுஷ்டானமுறையானது மகம்மதியர்களின் அரசாக்ஷிக்குப்பிறகுதான் நம் தேசத்தில் பரவலாயிற்று. மிலேச்சர்களிடம் பயந்து நடத்திவந்த ஆசாரத்தையே சாஸ்திரீயமென்று ஸ்தாபிப்பதற்காக புராணாதிகளிலும் எழுத ஆரம்பித்துவிட்டார்கள். புராணங்களும் மிலேச்சர்கள் காலத்தில் தான் எழுதப்பட்டனவென்றும் கூறுகின்ற சர்மாவின் மற்றொரு ஆக்ஷேபமும் அகன்றுவிட்டது.

ஸ்மிருதிபுராணாதிகளை இயற்றியவர்களாகிய மகரிஷிகள், மிலேச்சர்களிடம் பயத்தையடையமாட்டார்கள். அபயநிலையிலிருந்துகொண்டு நம்மை பயத்தையடையாமலிருக்கும்படி செய்யும் அவர்களிடம் பயமெப்படி அணுகும். மிலேச்சர்களுடைய அரசாக்ஷிக்குப் பிறகு, ஸ்மிருதிபுராணாதிகளையெல்லாம் எழுதும் சக்தியமைந்தவர் யாராவது இருந்திருப்பதாக சர்மாவால் நிரூபிக்க முடியுமா? ஒரு சிறு கட்டுக்கதையையும் கூட ஸ்வதந்திரமாக எழுதும் ஸாமர்த்தியம்நமக்கிருக்கவில்லையென்றால்இவ்வளவுபுராணாதிசாஸ்திரங்களை எழுதும்படியாக ஸாமார்த்தியம் அமைந்த மஹாபுருஷர்கள் மிலேச்சர்கள் காலத்தில் இருக்கவில்லைஎன்பது நிச்சயமல்லவா? மஹாகவிகள் அவரவர்கள் காலத்தில் இருந்தாலுங்கூட அக்கவிகளால் எழுதப்பட்ட மற்ற காவ்யங்களில் தனது பெயரை வைத்திருப்பதுபோலவே புராணாதிகளிலும் வைத்திருக்கவேண்டுமல்லவா? மகரிஷிகளின் பெயரையல்லவா ஸ்மிருதிபுராணாதிகளினிறுதியில் காண்கின்றோம். ஸ்மிருதி புராணாதிகளை இயற்றியது மகரிஷிகளேயாயினும் மிலேச்சர்கள் காலத்தியவர்களால் மிலேச்சர்களாசாரம்சாஸ்திரீயமென்பதற்காக புராணங்களில் புகுத்தப்பட்டன என்பதும் ஸரியல்ல. இப்படித்தமக்கிஷ்டமில்லாத விஷயத்தை சாஸ்திரங் கூறுமானால் அது கற்பிதம்என்று நிந்திப்பது ஸரியா?

மிலேச்சர்கள்காலத்து ஆசாரம் வேதவிருத்தமில்லாதபக்ஷத்தில் தோஷமுள்ளதல்லவாதலால் அதை ஆதரிப்பதற்கும் சாஸ்திரத்தில் புகுத்துவதற்கும் என்ன தடை? பிரக்ருதமாயுள்ள பாலிகாவிவாஹமுறை, வேதவிரோதமென்பது முன்பு நன்கு நிரூபிக்கப்பட்டதன்றோ?

இதுவரையில் பிரத்தியக்ஷமாயுள்ள புராணாதிகளுக்கும், வசனங்களுக்கும் வேதவிரோதமில்லாதவரையில் பிராமாண்யமுண்டு.

வேதவிரோதமிருந்தால்த்தான் அவைகளுக்கு அப்பிரமாணமென்பது என்ற விஷயம் ஸ்தாபிக்கப்பட்டது. மகரிஷிகளோ சிறிதும் காலதேசவர்த்தமானங்களை அனுஸரித்து ஸ்மிருதிபுராணுதிகளை எழுதவில்லே. இவ்விஷயம் முன்பு நிரூபிக்கப்பட்டது. ஆகையால் பாலிகாவிவாகமானது மிலேச்சர்கள்காலத்து ஆசாரரூபமல்லவென்று ஸித்தம்.

பொதுவாக கர்மானுஷ்டானத்திற்குக் காலம் பிரதானமென்பதில் விவாதமில்லே. அதிலும் விவாகத்திற்கு மிகவும் முக்கியம். ஸதிபதிகளின் வயோவடிவகாலமொன்று, மற்ருென்று கும்பம், மீனம் முதலியவை. இவற்றில் முதலாவதுதான் முக்கியம். முக்கிய காலத்தை வேதமறிவிக்கின்றதேயொழிய கௌணகாலத்தையல்ல. ஆனுல் வேதங்களுக்கு நல்ல லக்னுதிகள் முதலிய காலவிசேஷத்தை ஆதரிப்பதில் தாத்பர்யம் இல்லே என்பதில்லே. அன்றியும் தினந்தோறும் பஞ்சமகாயக்ஞம் செய்யவேண்டுமென்று சொல்லும் வேதத்திற்கும், மந்திரஜபங்களேயும், அனேக தேவ பூஜைகளேயும் விரிவாயுரைக்கும் புராணங்களுக்கும் விரோதம் பரஸ்பரமிருப்பதாகக் கூறியிருப்பதும் சிறிதும் ஸங்கதமாகவில்லே.

பஞ்சமகாயக்ஞத்தையும், சக்திக்குத் தகுந்தபடி மந்திரஜப பூஜாதிகளேயும் யாவருமாதரிக்கத்தான் வேண்டும். மந்திரங்களே கபோலகற்பிதமாகக் கூறுவதுமஸங்கதம். மந்திரசாஸ்திரங்கள் எல்லாம் நிஷ்பலமாயல்லவா முடிந்துவிடும். ஆனுல் புராணங்களில் கூறிய மந்திரஜபபூஜாதிகளே செய்யாமல் விட்டுவிட்டால் அதிக தோஷமில்லே. பஞ்சமகா யக்ஞம் வேதஸித்தமெனக் கூறுமிவர் புராணஸித்தர்களாகிய காரியங்களே விட்டாலும் விட்டுவிடட்டும் தோஷமில்லே. பஞ்சமகாயக்ஞத்தை ஒருக்காலும் விடலாகாது. பஞ்சமகா யக்ஞத்தையாவது விடாமல் செய்கிருரோ? செய்வாரா? பஞ்சமகா யக்ஞத்தை இவர் அனுஷ்டிக்குங் காலத்தில் மந்திரஜபாதிகளேயும் விடவேமாட்டார் என்பது நிச்சயம். ஒன்றையும் காரியத்தில் காட்டாமல் வாசாகைங்கரியம் புரிவது ஆஸ்திகர்களுக்கழகல்ல.

**गा यत्रीमात्रसारोऽपि द्विजो भवति निर्भयः ।**

என்பதாதி சுருதிஸ்மிருதி யுக்திகளால் காயத்ரீ மஹா மந்திரோபதேசம் நித்தியமெனப் புலப்படுவதால், அதைத் த்விஜர்கள் ஜபம்

செய்யாமலிருக்கலாகாது. ஸ்திரீ சூத்திரர்களுக்காகவும், பஞ்சாக்ஷரம் முதலியமந்திரங்களைஜபம் செய்வதிலாவதிலுள்ள த்விஜர்களுக்காகவும் மற்றமந்திரங்களுமவசியமேயாகும், த்விஜபுருஷர்களுக்கு, அவைகளை ஜபம் செய்யவேண்டுமென்பது அவசியமில்லை. இஷ்டமிருந்தால் செய்யலாம். இல்லாவிட்டால் விட்டுவிடலாம். காயத்திரியை மட்டிலுமப்படி விடலாகாது. ஆனால், பஞ்சாக்ஷர மஹாமந்திரமானது, காயித்திரீ மஹாமந்திரத்தைப்போல் வேதத்திலேயேக் கூறப்பட்டிருப்பதினால், அதையும் யாவரும் நித்தியமாக ஜபிக்கவேண்டும். ஓங்காரமின்றி ஸ்திரீ சூத்திரர்களும் பஞ்சாக்ஷரத்தை ஜபம்செய்யலாம்.

ஆகையால் இவ்விரு மந்திரங்களைத்தவிர மற்ற மந்திரங்களை ஜபம் பண்ணுவது காம்யந்தான் வேதங்களில் காயத்திரீமந்திரோபதேசம் மட்டிலும் த்விஜர்களுக்கு விஹிதமாயுள்ளதென்பதுமில்லை. பஞ்சாக்ஷரமஹாமந்திரஜபமும் நித்தியமாக வேதங்களில் விதிக்கவில்லையா.

नमश्शिवाय च शिवतरायच என்ற ஸ்ரீருத்திரத்திலும்,

विद्यासु श्रुतिरुत्कृष्टा रुद्रैकादशिनी श्रुतौ ।
तस्यां पंचाक्षरी मुख्या, शिवइत्यक्षरद्वयम् ॥

என்ற ஸ்மிருதியிலும் இதன் மஹிமையறியவும்.

புராணங்களில் 3-க்குமேல் 24-வரையில் மந்திரங்களை ஜபிக்க வேண்டுமென்று கணக்கிட்டுக் கூறியிருக்கவுமில்லை.

இனி வேதத்தில் குணகர்மாக்களால்தான் நான்கு ஜாதிகள் ஏற்பட்டன. பிறவியால் அல்லவென்ற சர்மாவினபிப்பிராயத்தை கண்டிக்கத் துடங்குவாம். பிறவியாலேயே ஜாதி நான்கு விதம் என்று வேதங்களில் சொல்லியிருக்கின்றன.

ब्राह्मणोऽस्य मुखमासीद्बाहू राजन्यःकृतः ।
ऊरु तदस्य यद्वैश्यः पद्भ्यां शूद्रोऽजायत ॥
“ ब्रह्म वा इदमग्र आसीत् ” अष्टवर्षं ब्राह्मणमुपनयेत

என்ற சுருதிகளால் நான்கு ஜாதிகள் ஸித்திக்கவில்லையா?

இவ்விதமே யஜுர்வேதம் 7-வது காண்டத்தில் நான்கு ஜாதிகளின் ஸ்ருஷ்டிக்ரமம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விதமே ஐதரேயப் பிராம்மணங்களிலும் நான்கு ஜாதியி

னுத்பத்திக்ரமம் நிரூபிக்கப்பட்டிருப்பதாலும் ஜாதிபேதம் பிறவியால்தானென்பது சுருதிஸித்தந்தான். அன்றியும் ஜாதிபேதத்தை எடுத்துக்காட்டக்கூடிய பதப்ரயோகம் பலவிடங்களிலுண்டு. இதனல் ஜாதி அனுதியென்றும் பிறவியாலேயே என்றும் நன்கு வேதஸித்தமாகவில்லையா?

जन्मना जायते शूद्रः என்ற சுலோகத்திற்கும் இவர்கள் சொல்லும் பொருள் ஸரியல்ல. இந்த சுலோகம் பிறவியாலேயே பிராமண்யம் ஸித்தித்துவிட்டதாக நினைத்துக்கொண்டு ஸம்ஸ்காரம் வித்யை பிரும்மக்ஞானமிவை தேவையில்லை என்று ஆக்ஷேபிப்பவர்களுக்கு சாஸ்திரவிதிப்படி செய்யப்பட்ட ஸம்ஸ்காராதிகளால்தான் உத்தமப்பிராம்மண்யம் ஸித்திக்குமென்றுஸமாதானங் கூறுவதற்காக ஏற்பட்டதேயொழிய பிறவியில் பிராம்மணனுகவில்லையென்பதை நிரூபிப்பதற்காகவல்ல. ஆகவே இவ்வசனத்திற்கு உபநயநஸம்ஸ்காரமாகாதவரையில் சூத்திரனுக்குச் சமனுக இருக்கிறுன். உபநயனுதிஸம்ஸ்காரம் பெற்றவுடன் உத்தமப் பிராம்மண்யம் பெற்று விளங்குகிறனென்றுதான் அர்த்தம்.

இக்கருத்தை

चित्रकर्म यथानेकैरङ्गैरुन्मील्यते पृथक् ।
ब्राह्मण्यमपि तद्वत्स्यात्संस्कारैर्विधिपूर्वकैः ।
ब्राह्मण्यां ब्राह्मणेनैव ह्युत्पन्नो ब्राह्मणः स्मृतः ।

என்று யாக்ஞவல்க்யஸ்மிருதி முதலியவையும் அறிவிக்கின்றன.

இப்படியிருக்க வியாஸர் முதலிய மகரிஷிகளின் சரித்திரங்களை திருஷ்டாந்தமாக எடுத்துக்கொண்டு குணகர்மாக்களால் ஜாதிப்பிரிவினை ஏற்பட்டதென்பதற்கிடமில்லை.

யுகாந்தரங்களில், பீஜமும் க்ஷேத்திரமும், ஸமான யோக்யதையுள்ளதாக இருக்கவேண்டுமென்று நியமமில்லாமலே, க்ஷேத்திரம் கீழ்ப்பட்டதாகவிருந்தாலும், பீஜம் சிறப்புற்றதாயிருந்ததால் அதன் ஸந்ததியும், சிறந்த பீஜஜாதியையடைந்தது. இவ்விதமே மனுகூறியிருக்கின்றுர்.

यस्माद्वीजप्रभावेण तिर्यग्जा ऋषयोभवन् ।
पूजिताश्च प्रशान्ताश्च तस्माद्वीजं प्रशस्यते ॥

என்று. ஆதலால் மகரிஷிகளினுத்பத்தியில் பீஜம்தான் காரணம். மகரிஷிகளின் மூலத்தை விசாரிக்கக்கூடாதென்று உலகமொழியல்லவா? மகரிஷிகள் தாழ்ந்தஜாதி ஸ்திரீகளிடம் காமவெறிகொண்டு விஷய ஸுகபோகத்திற்காக பிரவேசிப்பதில்லை. ஜிதேந்திரியர்களாகிய அவர்களுக்கு காமவெறி எப்படிப்பிடிக்கும், ஆதலால்த்தான், கேவலம் காமாதுரர்களைப்போல், அவசியம் நேர்ந்தபோதுதான் ஸம்பந்தப்பட்ட அஸதிருசஸ்திரீயுடன் வெகுகாலம் கூடியிராமல் குறிப்பிட்ட காரியத்துக்கேற்பட்ட காலஅளவுடன் அவர்கள் ஸம்பந்தத்தையுடனேவிலக்கிவிட்டார்கள். ஸத்யஸங்கல்பர்களாகியமகரிஷிகள் அபாரசக்திபொருந்திய ஸந்ததியைக்குறித்துத்தான்ஸ்திரீகளிடம் பிரவேசிப்பது இவர்களுக்கு இந்தலக்னத்தில் பிரவேசித்தால் ஸந்ததிக்கு வீர்யமதிகம் இருக்குமென்பதும் முன்பே தெறிந்துவிடும். அந்த சுபயோகசுபகாலத்தில் சொந்த க்ஷேத்திரமுபயோகப்படாமலிருக்கும் ஸந்தர்ப்பத்திலும் அதம க்ஷேத்ரங்களிலும் தமது வீர்யத்தை விநியோகம் பண்ணிவிடுவதுமுண்டு. அந்தக்ஷேத்ரத்திலுதித்தவர்களும் அப்படியே அபாரவீர்யமுள்ளவர்களும் லோகோபகாநிரதர்களாகவும் பிரகாசித்திருப்பதை யாவரும் மறுக்கமுடியாது. மகரிஷிகளின் பிரபாவத்தாலும் அவர்களால் ஸங்கல்பிக்கப்பட்ட சுபகாலமஹிமையாலும் அதமஜாதி க்ஷேத்திரத்திலும் உத்தமஜாதிஸந்ததி உத்பத்தியடைவதில் தோஷமில்லை. இவ்வாறே அனேக மகரிஷிகள் தமது வீர்யத்தை பூமி ஜலம் இவைகளிலும் பிரவேசிக்கும்படி செய்து அவற்றை சாப்பிடும் கிளி முதலிய திர்யக்ஜாதிகளிடமும் ஸர்வோத்தமர்களாகிய சுகர் முதலிய மகரிஷிகுமாரர்களை உத்பத்தி செய்திருக்கின்றார்கள்.

மேலும் முன்யுகங்களில் மட்டிலும் பீஜத்தையனுஸரித்து ஜாதிவியவஸ்தை அறிவிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி இந்த யுகத்திலில்லை.

सत्यस्य विप्लुपो यावत्तावद्बीजं प्रशस्यते ।

என்றல்லவா தர்மசாஸ்திரம், ஆகவே இக்காலத்தில் பீஜம் க்ஷேத்திரம் இவை இரண்டும் சமானமாகவேதானிருக்கவேண்டும். இல்லாவிடில் சுத்தஜாதிபரம்பரை ஸித்திக்கமுடியாது.

மகரிஷிகளுடைய அதர்மாசாரத்தையவலம்பித்துக்கொண்டு நாமுமப்படியே தர்மத்தை அதிக்ரமணம் பண்ணும்பக்ஷத்தில் அனர்த்தபரம்பரையைத்தான் அனுபவிக்கவேண்டும். புருஷார்த்தம் யாதொன்றும் ஸாதித்துவிடமுடியாது.

धर्मव्यतिक्रमो दृष्टो महतां साहसं तथा ।
तदन्वीक्ष्य प्रयुंजानस्संसीदत्यपरोऽबलः ॥
तेजोमसानि पूर्वेषां शरीराणीन्द्रियाणि च
दोषैस्तेनोपलिप्यन्ते पद्मतत्रयिवांभसा ॥

இவ்வசனங்களால் 'மகரிஷிகள் ஸாஹஸத்தால் தர்மமார்க்கத்தை மாற்றி நடத்தினதாக சொல்லிக்கொண்டு துர்பலர்களாகிய மற்றவர்களும் அதைப்பின்பற்றி அனுஷ்டிப்பார்களேயானுல் கஷ்டந்தானடைவார்களென்பது விளங்கவில்லையா?

அன்றியும், தைத்திரீயோபநிஷதத்தில் தேவர்கள் முனிவர்கள், இவர்களனுஷ்டித்துவந்த கர்மாக்களை மனிதர்கள் பின்பற்றியனுஷ்டிப்பது தகாது. அவர்களுபதேசித்த உத்தம காரியத்தை மட்டிலுந்தான் நாமனுஷ்டிக்கலாமென்றுகூறப்பட்டிருக்கின்றது. இதையே,

अनुष्ठितं च यद्देवैर्मुनिभिर्यदनुष्ठितम् ।
नानुष्ठेयं मनुष्यैस्तद्युक्तं कर्म समाचरेत् ॥

என்ற ஸ்மிருதியும் கூறுகின்றது.

ஆதலால் மகரிஷிகளால் நடத்தப்பட்ட காரியம் சாஸ்திர விரோதமாகவிருப்பினும் நாமதை நடத்தக்கூடாதென்று ஸித்தம்.

இதனுலேயே வியாஸர் முதலியவர்களியற்றிய புராணங்களுக்கும் தோஷம் சிறிதுமணுகாது.

ஸ்ரீ வியாஸாசாரியருக்கு மனச்சாந்தி ஏற்படவில்லை என்ற கதை பகவத்பக்தி மார்க்கத்தை ஸ்துதி செய்வதற்காக எழுதப்பட்டிருக்கிறதேயொழிய, உண்மைக்கதையல்ல. உண்மையில்லாதகதையைச் சொல்லி, யக்ஞம் முதலிய கர்மாக்களில்பிரவர்த்திக்கும்படி செய்வது வேதங்களிலும் வழக்கமுண்டு. புராணங்களில் அவ்விதக் கதையை எழுதுவதில் என்ன விரோதமிருக்கின்றது? இதனுல் புராணங்களுக்குப் பிராமாண்யமில்லை என்று ஸித்தித்துவிடுமா?

அன்றியும். விதுரர் தாஸியின் புதல்வராய் இருந்தாலும், பூர்வஜன்மங்களில் செய்த புண்யவிசேஷத்தால் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் ஸஹவாஸத்தாலும்சிறந்ததத்துவக்ஞானியாகையால்அவருடைய ஜாதியையும் கவனிக்காமல் அவருடைய புஸ்தகத்தின் மேன்மையை எடுத்துரைப்பதில் என்ன தோஷம். சாந்தோக்யோபநிஷதத்தில் ரைக்வமகரிஷியால் ஜானசுருதிமகாராஜனிடம், பிரயோகிக்கப்பட்டிருக்கும் சூத்திரபதத்திற்கு சூத்திரஜாதியில் பிறந்தவனென்று அர்த்தமில்லை. ஹம்ஸமூலமாக ஆத்மதத்வக்ஞானத்தின் பெருமையைக்கேட்டு அத்தகைய ஆத்மதத்துவக்ஞானத்தை நாமடையவில்லையே என்ற துக்கத்தோடு ரைக்வரிடம், க்ஞானச்ருதிவந்தபடியால் ரைக்வரானவர் ஓ, துக்கத்துடன் கூட இவ்விடம் வந்தவனே என்று ஜானச்ருதியைக் கூப்பிடுகிருனேயொழிய வேறல்ல. ஜானச்ருதி க்ஷத்திரியனென்பது நிச்சயமல்லவா ? அவனை எப்படி சூத்திரனென்று ரைக்வரழைக்கக்கூடும். இவ்விஷயம் அதே உபநிஷத்திலும், அதன் பாஷ்யத்திலும் அபசூத்திராதிகரணத்திலும் அறியத்தக்கது.

ஸத்யகாமோபாக்யானத்திலிருந்தே ஸத்யகாமஜாபாலன் சூத்திரனல்லவென விளங்குகிறது. கௌதமர், ஜாபாலனை ஸத்திய வசனத்தைக்கொண்டு பிராம்மணனென்று தீர்மானித்துக் கொண்டபிறகு தான் உபநயனபூர்வமாக வேதங்களைப்படிப்பித்தாரென்றல்லவா அவ்வுபநிஷதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விஷயமும் அபசூத்திராதிகரணத்தில் விசதம். ஆகவே ஜாபாலனை எவன் மூர்க்கருணத்தோனென்று கூறுகிருனே அவன் தான் அறிவில்லாதவன் என்பதில் என்ன ஸந்தேஹம். இதனால் 'சூத்திரன் வேதத்தைப் படிக்கலாமென்பதற்கு ருக்வேதம், பாரதம், ராமாயணம் முதலியவற்றைப் பிரமாணமாக எடுத்துக்காட்டியதிலும் சர்மாவிற்கு ஸாதகமாக யாதொரு அர்த்தமுங்காணவில்லை என்பதும் ஸித்தம். ஸத்யகாமோபாக்கியானத்தின் அர்த்தத்தையே யறியாமல் உளரும்போது, ருக்வேதத்தின் அர்த்தத்தையும், பாரதவசனத்தினபிப்ராயத்தையுமிவரெப்படி அறிந்திருப்பாரென்று நம்புவது? தமக்கு ஸாதகமாகவிருப்பதுபோல் விளங்கும் வசனங்களையும் சரித்திரங்களையும், ருக்வேதம், 10-அ 3-30-34 என்பதாதி எண்ணிக்கை மூலமாக எடுத்துரைத்தால் எண்ணம் நிறைவேறிவிடுமா? ஸ்பஷ்டமாகவல்லவா இவர் எழுத

வேண்டும். ஆகையால் சூத்திரர்கள் வேதாப்பியாஸம் செய்யலா மென்பதற்குச் சிறிதும் பிரமாணமில்லை என்று வித்தம், ஆனால் அவர்களுக்கு வேதாப்பியாஸத்திலதிகாரமில்லை என்பதற்கு அனே கசுருதிஸ்மிருதிகளை முன்பே எடுத்துக்காட்டிவிட்டோம்.

மேலும் யாகம் முதலிய விஷயங்களில் மாம்ஸம் சாராயம் முதலியவற்றைப் புசிக்கலாம் என்று வேதம்தான் கூறுகின்றதே யன்றி புராணம் கூறுகிறதென்று சர்மா எழுதுவது மிகவிருத்த மாயிருக்கிறது. வேதத்தில் மாம்ஸத்தை உபயோகிக்கலாகா தென்பது யாகம் முதலியவிடங்களைத்தவிர மற்றவிடங்களில் தான். இவ்விதம் வேதத்தில் மாம்ஸத்தை விஷயபேதத்தையனு ஸரித்து விதித்தும் நிந்தித்துமல்லவா இருக்கிறது. ஆகலால் இவர் வேதத்தில் மாம்ஸத்தை நிஷேதித்திருப்பதாகமட்டிலும் நினைத்துக் கூறுவதும், புராணங்களில் மாம்ஸத்தை விதித்துமட்டிலுமிருப் பதாகக்கூறுவதும் அறியாமலேயேதான் என்றுஅறிக. தற் காலத்தில் ஆடுமாடுகளை வதைசெய்து சாப்பிடும்வழக்கம் புரா ணங்களாலேற்பட்டதென்பதும், புராணங்களில் துவேஷபுத் தியால்தான். முன்காலத்தில் நாரதரைப்போன்றவர் மாம்ஸம்சாப் பிட்டிருப்பதால் நாமும் சாப்பிடலாமென்றால்; அவர் ஓரிடத் தில் உலையில் நெருப்பு மழுவை சாப்பிட்டிருப்பதால் மழுவை நாமும் சாப்பிடலாமா? முடியுமா? ஆபத்காலத்தில் யாவரும் எந்த ஆகாரத்தையும், எல்லாவிடங்களிலும் புசிக்கலாமென்றல் லவா சாஸ்திரம்.

जी[illegible]वितात्ययमापन्नो योऽन्नमत्ति यतस्ततः ।

என்றல்லவா மனு கூறுகின்றார். மற்ற காலங்களில் பசு, ஆடு, கோழி முதலிய ஜீவஜந்துக்களைக்கொன்று வயிறு வளர்த்துக் காலங்கழிப்பது துர்வாஸனை மூலமேயொழிய புராணமூலமல்ல வென்பதை சர்மா அறியவேண்டும்.

மேலும் புராணங்களில் பரமசிவனும் பார்வதியும் சூதாடினார் களென்றெழுதியிருப்பதால்தான் தற்காலத்தியவர்களும் அதைப் பின்பற்றி சூதாட்டத்தை விடமாட்டேனென்கிறார்களென்று இவர் கூறுவதும் வெகு விநோதமாய் இருக்கிறது.

பரமசிவனும் பார்வதியும் சூதாடினதால் தான் தற்காலத்திய வர்களும் அதை அனுஷ்டித்தார்களோ? மகாவிஷ்ணுவும் லக்ஷ்மீ

யும் ஸுராயைச் சாப்பிட்டதாகப் புராணங்களில் சொல்லியிருப்பதை அநுஸரித்துத்தான் தற்காலத்தியவர்களும் கட்குடியில் இறங்கியிருக்கிறார்களென்றுமிவர் கூறுவர்போலும். இப்படிப்பட்டக் கதையை எழுதும் சர்மாவுக்கு ஈசுவரநிந்தையால் உண்டாகிய பாபமேற்படுமென்பதில் ஐயமில்லை. இதிஹாஸ புராண பாரதாதிகளில் சூதாட்டத்தைப்பற்றிய சரித்திரங்களை கவனித்தால் சூதாட்டமாடியவனுக்கு நரகாதியாதனை உண்டெண்டுளெழுதவில்லை. ஆனால் சொத்துக்களழிந்து சீர்கேடடையும்படி நேரிடும் என்ற திருஷ்டதோஷத்தை அநுஸரித்தே அவை கூடாதென்பது சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்வித சூதாட்டத்தை முன்காலத்தில்க்ஷத்திரியர்களனுஷ்டித்துவந்தார்களே தவிர பிராம்மணர்கள் அநுஷ்டித்ததாகத் தெரியவில்லை.

द्युतं समाह्वयं चैव यः कुर्यात्कारयेत वा ।
तान्सर्वान्घातयेद्राजा शूद्रांश्च द्विजलिङ्गिनः ।

என்று மனுசூதாட்டங்கூடாதென்று விலக்கிவிட்டாரல்லவா? ஆதலால் தற்காலத்தியவர்களதையாடுவதற்குப் புராணக்கதை ஆதாரமாகாதென்று ஸித்தம்.

தவிற, ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் ஒரு பெண்ணை திருடினார் என்றும், அதற்காக நாரதரை வஞ்சித்தாரென்றும், சர்மா எழுதுவதும் தவறு. பகவானிடம் பொய், களவு, உபத்திரவித்தல் இவை முதலிய கெட்டஸ்வபாவத்தை புராணங்கள் சொல்லுகின்றதால், அப்புராணம் பிரமாணமில்லை என்று ஸ்தாபிப்பதற்கு லிங்க புராணத்திலுள்ள கதையைப்போய்த் தேடிப்பிடித்து எதற்கிவர் எழுதவேண்டும்? தினந்தோறும் ஒவ்வொரு கிராமங்களிலும் தெருத்திண்ணைகளில் பிரவசனம் செய்யப்படும் பிரஸித்த பாகவதக்கிரந்தத்தையே எனெடுத்துக்காட்டக்கூடாது? ஸ்ரீகிருஷ்ணன் திருடவில்லையா, பொய் சொல்லவில்லையா? பிறரை உபத்திரவிக்கவில்லையா? வஞ்சிக்கவில்லையா? என்ன செய்யவில்லை. எனவரை உதாஹரிக்கலாகாது. பாகவத புராணமும் ஸ்ரீகிருஷ்ணனுமப்படித்தானென்றால் வேதத்தில் கூறிய பொய் முதலியவற்றை யார்தான் செய்யவில்லை என்றிவர் நினைத்துக்கொண்டிருக்கிறார்,

ஈசுவரனுடைய ஸ்வரூபத்தை இவர் நன்குணருவாரோ? ஸர்வேசுவரனாகிய ஸகுணபரமாத்ம சைதன்யந்தான் திருமூர்த்திகளாகவும் ராமகிருஷ்ணாதிகளாகவும், இப்பிரபஞ்சம் பூராவுமாகவுந் தோன்றுகிறது. பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், தேவர்கள், ரிஷிகள் அவதாரபுருஷர்களாகிய ராமகிருஷ்ணாதிகள் இவர்களெல்லாரும் வைதிக மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காக அனேக உபாயங்களை அவலம்பிப்பார்கள். அவ்வுபாயங்களில் பொய் முதலியவை ஏதாவது நேரிடுமேயானால் அதனால் அவர்களுக்குப் பாபம் சிறிதும் ஸம்பவிக்கமாட்டாது. வேதத்தினாலேயே பாபமில்லாதவர்களென்று ஸ்துதிசெய்யப்பட்டவர்களல்லவா அவர்கள்? அவர்களுடைய காரியங்களெல்லாம் லீலாமாத்திரந்தான் அன்றோ? மத்யமாதிகாரிகளுக்காகவல்லவா சூதாட்டக் கதையையும் லிங்கபுராணம் எழுதுகின்றது. பகவானுடைய சரித்திரத்தை அறிவிக்கும் புராணங்களெல்லாம் பகவானை மனிதனைப் போல் பாவனை பண்ணிக்கொண்டுதான் பிரவிருத்திக்கின்றது. புராணங்களில் திருமூர்த்திகளை உத்பத்தி செய்தவர் வேறொருவர் அவர் தான் ஈசுவரன் என்பது அவருடைய ஸாத்விகாம்சம் நிறம்பியவர் ஸ்ரீமந்நாராயணன் என்பவர்.

ஆதலால் இவரையே ஸர்வேச்வரனாக நினைத்துக்கொண்டு, "ஐயோ இவர் பொய் சொல்லிவிட்டாரே" என்று ஏனலறியழ வேண்டும்? இவைகளைக் கட்டுக்கதையாகக் கூறுமிவருக்கு எது உண்மைக்கதை என்று அபிப்பிராயமோ புரியவில்லை. அத்வைத ஸித்தாந்தத்தில் வேதக்கதையுங் கட்டுக்கதைதானன்றோ? அத்வைதஸித்தாந்தக்ஞானம் வந்தபிறகல்லவா அவ்வேதக்கதை கட்டுக்கதையாகும். முந்தியல்லவே என்றால் புராணக்கதையையும், கட்டுக்கதையாக அந்த க்ஞானம் வந்த பிறகு நம்பட்டும் அதற்கு முன்பு அக்கதையை கட்டுக்கதையாக யாரால்தான் கூறமுடியும்.

இக்கட்டுக்கதைகளை பகவானே ஸிருஷ்டித்தார் என்பதையும் முன்பு நன்கு நிரூபித்துவிட்டபடியால்சுயநலங்கருதிய பிராம்மணர்கள் செய்துவிட்டார்களென்று முன்னோர்களை இகழ்வதும் ஸரியல்ல. சுயநலங்கருதிய பிராம்மணர்களுக்குப் புராணங்களைச் செய்யுமுபகாரபுத்தியுமெப்படித்தோன்றும். முன்னோர்கள் பக்ஷபாதமற்றவர்களென்றும் முன்பு நிரூபிக்கப்பட்டது. இவ்வாறே ஸ்திரீகளுடைய முக்தியின்பொருட்டு உபாயங்களை அறிவிக்கும்

வேதபுராணவிரோதமுமலங்கதமென்று நிர்மானித்துக்கொள்ள வேண்டும்.

கங்கை முதலிய புண்யதீர்த்தாடனமும், விருதோபவாஸ பூஜாதிகளும் நமது சாஸ்திரங்களில் விதவா தர்மமாகவல்லவா கூறப்பட்டிருக்கின்றது. நமது சாஸ்திரங்களில் கணவனிறந்த வுடன் கணவனிடத்திலுள்ள பக்திவிசுவாசமிகுதியால் அவனுடன் கூடவே பத்னீ அனுமிருதி செய்துவிடலாமென்றும், கர்ப்பம் முதலிய காரணத்தால் அப்படிச் செய்ய ஸங்கர்ப்பம் இல்லாவிட்டால் பிரும்மசர்யவிருதத்துடன் விருதோபவாஸ பூஜாதிநியமங்களால், கணவனையே பூஜித்துக்கொண்டு ஸந்யாஸீ, நைஷ்டிகபிரும்மசாரி இவர்களைப்போல் உயிரிருக்கும் வரையிலுங் காலங்கழித்து வாலா மென்றும், அவளுக்குப் பதிலோகமுண்டென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா? கணவனுயிருடனிருக்கும்போது அவனுக்குக் குப் பணிவிடைசெய்துவந்ததுபோல், அவன் காலஞ்சென்ற பிறகும் அக்கணவனின் உருவத்தையே விருக்ஷாதிகளில் தியானித்துப் பூஜிக்கவேண்டுமேயொழிய வேறு தேவதையையும் ஈசுவானையுங்கூட தியானிக்கலாகாதென்றல்லவா விதவாதர்ம ஸித்தாந்தம். இந்த ஸித்தாந்தத்தைப் புராணங்கள் கண்டிக்கவில்லையே? விதவை மறுமணம் செய்யவேண்டுமென்ற வாதம் தாண்டவமாடும் இந்நாளில் பேரின்பத்தில் எப்படி ஸ்திரீகளுக்கும் புத்திசெல்லும். ஆகையால் நண்பர் அவர்கள் எப்படி முக்தியடைவார்கள் என்ற அனுதாபப்படுவது விபலமேயாகும்.

மேலும் தீர்த்தபதார்த்தத்தை வேதம் புராணமிவை இரண்டும் பரஸ்பர விருத்தமாகக் கூறுகின்றனென்று ஆக்ஷேபமும்ஒருபதத்திற்கு அனேகார்த்தம் இருக்கலாம் என்ற விஷயம் அறியாததால் என்றுணறவும். புராணத்தில் கூறியபடி காவேரீ முதலிய நதிஸ்னானகட்டமென்ற அர்த்தத்திலேயும் வேதங்களில் தீர்த்தப்பத ப்ரயோகம் காணப்படுகிறது. அதேமாதிரி வேதத்தில் கூறிய அர்த்தவிசேஷத்திலேயும் புராணங்களில் தீர்த்தபதப்பிரயோகம் உண்டு. ஆகையால் தீர்த்தபதார்த்தத்தில் வேதபுராணங்கள் விரோதம் யாதொன்றுமில்லை, இனி சர்மா— வேதத்தில் உண்மையை அறிந்து காலாகாலங்களை அனுஸரித்து செய்துவருவது காரியத்துக்குத் தப்பென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனல் புராணத்தில் நாலுபுறமும் நெருப்பைப்போட்டுக்கொண்டு மத்தியிலுட்கார்ந்து கொண்டிருப்பதை தப்பென்றும் சொல்லப்படுகிறதென்று எழுதியிருக்கிறார். இப்பிரச்னத்துக்கு இவர் தானர்த்தங் கூறவேண்டும். இவ்விருதப்புக்களுக்கும் விரோதமெப்படி என்பதையுமிவர்தான் நிரூபிக்கவேண்டும், வேதத்தில் காரியங்களை காலாகாலங்களை நன்ருயனுஸரித்துச் செய்வது தான் ஸரியானதென்று தானேசொல்லுகிறது. வேதத்தில் காலாகாலங்களை யனுஸரித்துக் காரியங்களைச் செய்வதுதப்பென்று சொல்லியிருப்பதாக நண்பர்கூறுவது தான்தப்பு. வேதோக்த கர்மாக்களை, காலந்தவருமல் விதிப்படி நடத்தவேண்டுமென்றல்லவா வைதிகஸித்தாந்தம்.

இவ்விதமே புராணத்தில் நாலுபுறமும் நெருப்பைக்கொட்டிக்கொண்டு மத்தியில் உட்கார்ந்துகொண்டு தவம்புரிவதை தப்பு என்று சொல்லியிருப்பதாக இவர் எழுதியிருப்பதும் தப்பு, இப்படி பஞ்சாக்னிமத்தியத்தில் வஸித்துக்கொண்டு தவம் புரிவது நல்லதென்று அல்லவா புராணத்தில் விதிக்கப்பட்டுளது. பஞ்சாக்னிமத்தியில் தவம் புரிவது சுருதிஸ்மிருதிபுராணுதிஸித்தமென்பது யாவருமொப்புக்கொள்ளவேண்டியதல்லவா?

இதனுலேயே விருதசப்தார்த்தத்தில் நண்பர் எடுத்துக் காட்டிய வேதபுராணவிரோதமும் நீங்கிவிட்டது. இரண்டு அர்த்தங்களிலும் சுருதிபுராணுதிகளில் விருதபதப்பிரயோகம் காணப்படுகின்றது.

புராணங்களில் கூறியபடி ஏகாதசி முதலியவிருதங்களை நாம் அனுஷ்டிப்பது அனுவசியமென்று சொல்வதிற்கிடமில்லை,

ஏகாதசிமுதலிய விருதானுஷ்டானங்களாலும் சித்தம் சுத்தமாக விளங்கலாம் என்றல்லவா சுருதிஸ்மிருதி ஸித்தம்?

" तमेतं वेदानुवचनेन...तपसानाशकेन "

என்றல்லவா வேதம். ஆகவே என் விருதானுஷ்டானங்களால் ஒருவன்மோக்ஷத்தையடையமுடியாது. மோக்ஷத்திற்குஸாக்ஷாத்தாகக்காரணமாகவிருக்கும் ஞானத்தையடையும் அனேக உபாயங்களை சாஸ்திரங்களில் விதிப்பதும் அவற்றை நாமனுஷ்டிப்பது முசிதமல்லவா? அவ்வுபாயங்களில் தமக்கு வந்த யாதாமொரு

உபாயத்தை சாஸ்திரமூலமாகவும் குருபதேசவாயிலாகவும் முதலில் நிர்ணயித்துக்கொண்டு செய்யும்பக்ஷத்தில் யாதொரு கெடுதியும் நேரிடாது. இன்றேல் கெடுதிதான். இதுதான் உண்மை என்பதை இவர் அறிவாராக.

மேலும் வேதத்தில்மட்டிலும் கர்மபலனை அனுபவித்தே தீரவேண்டுமென்றிருப்பதாக நண்பர் கூறுவது தவறு.

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ।

என்று ஸ்மிருதியிலும் கூறவில்லையா?

புராணங்கள் கூறியிருப்பதாக சர்மா எழுதிய விருதங்களையும் பிண்டதானுதிகளையும் வேதமும் விதிக்கின்றதென்ற விஷயம் யாவருக்கும் வெளிப்படையன்றோ?

தர்மானுஷ்டானத்தால் இஹபரசுகமும் அதர்மா(பாபா)னுஷ்டானத்தால் இஹபரதுக்கமென்பதும் ஆர்யஸித்தாந்தமாகும். தர்மத்தையோ அல்லது அதர்மத்தையோ அனுஷ்டித்தவன் அவசியமதன் பலனையும் அனுபவித்தே தீரவேண்டுமென்பது ஸத்தியமேயானுலும் धर्मेण पापमपनुदति என்ற சுருதிவசனப்படி பிராயச்சித்தவடிவமாய் வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள தர்மகாரியங்களைச்செய்து பாபகர்மாவின் பலானுபவத்தைமட்டிலும் ஏற்படாமலிருக்கும்படி செய்துகொள்வது மிகவும் முக்கியமென்றும் அப்பிராயச்சித்தத்தால் பாபபலானுபவமேற்படாமலிருக்குமென்பது வாஸ்தவந்தானென்றும் பிராயச்சித்தகர்மாவிற்கு தம்முடையவும் தம் முன்னோர்களுடையவும் பாபபலானுபவத்தை நிறுத்திவிடும் ஸாமர்த்தியமுண்டென்றும் விரிவாக சுருதிகளிலேயே விசதமாயிருப்பதால் விருதானுஷ்டானங்களாலும் தம்மையும் தம் முன்னோர்களையும் மோக்ஷபரியந்தமுள்ள பிரயோஜனத்தையடையும்படி செய்யலாமென்பதில் என்ன ஸந்தேகம்? ஒருவன் செய்துகொண்ட பிராயச்சித்தத்தால் மற்றொருவனுக்கு துக்கமெப்படி நீங்குமென்றும்சங்கிப்பதும்ஸரியல்ல. தர்மம் தலைமுறையைக்காக்கும் என்றல்லவா உலகமொழி? ஒருவன்செய்த தர்மத்தின் பயனை அவன் ஸந்ததியாருமடைவது உலகப்பிரத்தியக்ஷமே. நம் முன்னோர் செய்த நற்கருமத்தாலன்றோ நாம் புத்திமான்களாயும் தனவான்களாயும் ரூபலாவண்யம் வாய்ந்தவர்களாயும் சுகமாகவாழ்வதெல்லாம். நாம் செய்த கர்மபலனைநாமனுபவிக்கின்றோமென்றால்

அனேக தலைமுறைகளாக தர்மத்தைக் கையாளாமல் விட்டிருக்கும் நாம் ஜன்மாந்தரங்களிலும் அதர்மத்தைத்தான் அனுஷ்டித்திருக்கவேண்டுமாதலால் நாம் செய்த பூர்வகர்மானுஷ்டானத்தால் நமக்கு தற்போதுள்ள ஸுகானுபவமேற்படுவதற்கு நியாயமில்லை. ஆகையால் மகரிஷிகளின் விருதானுஷ்டான நியமங்களால்தான் ஸுகம் நமக்கேற்படுவதாக ஒப்புக்கொள்ளவேண்டும். இதுபோல் அதர்மத்தையும் ஊஹித்துக்கொள்ளவேண்டும். ஒருவன் பாபத்தைச்செய்தால் அது அவனுடைய ஸந்ததியிலும் பாதிப்பதில்லையா குஷ்டம் முதலிய ரோகவிசேஷங்களை ஸாங்கிராமிகம் (தொத்துவியாதி) என்றும் குலபாம்பரையாக ஏற்படுவதென்றும் கர்ப்ரோகமென்றும் முன்னோர்களுடைய பெரியதியச்செயலாலும் ஸம்பவிக்கலாமென்றும்வைத்தியசாஸ்திரங்களுங் கூட முறையிடுகின்றன.

இவ்வாறிருக்க புத்திரன் செய்த சிராத்தாதிகளால் பிதா மாதா முதலியவர்களுக்குப் பாபபலானுபவத்திலிருந்து மீளுவது மிகவும் ஸரிதான்.

இதனுல் கர்மத்தையோட்டி அனுபவிக்கும்படி செய்யாமலிருக்கும் பகவானை எப்படி நியவாதியாகக் கருதக்கூடுமென்ற பேச்சும்-நல்லதல்லவென்றுணர்க, பிராயச்சித்த கர்மாவின் பயனையுமனுபவிக்கும்படி செய்வது மீசுவரனுடைய வேலையன்றோ? ஜீவர்களுக்கு பாபகர்மாவையொட்டி அதன் பலமாகிய துக்கத்தை இஹபரலோகங்களில் அவசியமனுபவிக்கவேண்டும் என்று ஈசுவரன் செய்வதுபோல், அதன் பிராயச்சித்த கர்மாவிற்கும் பயனையும், அக்கர்மாவையனுஸரித்து அவனை அனுபவிக்கும்படி செய்வதும், உசிதமில்லையா! ஆதலால், கடினமாயுள்ளப் பிராயச்சித்தகர்மத்தை அனுஸரித்து பாபகர்மபலானுபவத்தை நசிக்கும்படி செய்யும் ஸர்வேசுவரன்தான் கூடஸ்த நியாயவாதியாவர். தவிற-சர்மா, இவ்விடத்தில் கர்மபதத்தைப் பிரயோகித்திருப்பது பொருத்தமாயில்லை. சர்மபதத்திற்கு தர்மம், அதர்மம், இரண்டுமர்த்தம். இவற்றில் தர்மகாரியத்திற்குப் பிராயச்சித்தமென்பது விதிக்கவில்லை, அதர்மாசரணத்துக்குத்தான் பிராயச்சித்தகர்மா ஏற்பட்டது. அசுத்தியை விலக்குவதற்குத்தான் சுத்திபதார்த்தம் தேவையேயன்றி சுத்தியை விலக்குவதற்கல்ல. சுத்தியை சுத்தம் விலக்கவும் முடியாது. இரவுக்கும் பகலுக்கும்போல் சுத்திக்கும்

அசுத்திக்குந்தான் விரோதமேயொழிய சுத்திக்கும் சுத்திக்கும் விரோதமில்லையாதலால் சுத்தியை சுத்தி விலக்கமுடியாது. அசுத்தியைத்தான் சுத்தி விலக்கும். ஆகையால் தர்மகாரியத்துக்குப் பிராயச்சித்தமில்லை. ஆகவே பொதுவாக கர்மபதத்தை இவ்விடத்தில் பிரயோகஞ் செய்திருப்பது தகுதியில்லை

இதனால் உலகில் காணப்படும் ஸிருஷ்டிவைசித்திரியத்துக்குக் காரணமென்னவென்ற கேள்வியும் தள்ளப்பட்டாய்விட்டது. ஒருவன் தரித்திரனாகவும் மற்றொருவன் பணக்காரனாகவும் இன்னும் பலவித ஸ்வபாவமாகவும் ஸிருஷ்டி விசித்திரமாய் இருப்பதற்கு ஜீவராசிகளின் கர்மாக்களே காரணமென்பது சுருதிஸ்மிருதி புராண பிரும்மஸூத்திரம் யுக்தி அநுபவப்பிரமாணங்களாலேயே ஸித்தம். அவற்றைச் சற்று நமது நண்பரும் யோஜித்துப்பார்க்க வேண்டும். (தொடரும்)

வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

---

# சந்தாநேயர்களுக்கோர் விக்ஞாபனம்.

சென்ற புரட்டாசி௴ 9 & 16௳ இந்த தேதிகளில் வெளியாகவேண்டிய 34 & 35 ஸஞ்சிகைகள் இரண்டையும் எதிர்பாராமல் ஏற்பட்ட சில வேலைத் தொந்திரவாலும், நமது பத்திராதிபருக்கு ஏற்பட்ட சௌகர்யக்குறைவாலும் நிறுத்தும்படியாக ஏற்பட்டுவிட்டது. ஷை 9 & 16 தேதிகளில் வெளியாகவேண்டிய 34 & 35 ஸஞ்சிகைகள் இரண்டையும் சேர்த்து இந்த வாரத்தில் அனுப்பப்பட்டிருக்கிறது.

நாளது புரட்டாசிமாசத்தில் ஐந்து குருவாரங்கள் வருகிறபடியாலும், கிரமமாய் ஐந்தாவது வாரபத்திரிகையை நிறுத்துகிற வழக்கத்தை அநுசரித்தும், நாளதுவாரம் 23௳ குருவாரத்தில் வெளியாகவேண்டிய பத்திரிகையை நிறுத்தப்பட்டிருக்கிறது. புரட்டாசி௴ 30௳ குருவாரத்தன்று நாளதுவாரத்தில் வெளியாகவேண்டிய 36 ஸஞ்சிகை பப்ளிஷ்செய்யப்படும்.